






தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் சார்பில் தலைவர் பி.எஸ். அமுல்ராஜ் தலைமையில் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள அரங்கில் நேற்று (13.07.2024) சட்ட கல்வி முடித்த 777 நபர்கள், பார்கவுன்சிலில் வழக்கறிஞர்களாக பதிவு செய்து கொண்ட நிகழ்ச்சியில் கழக சட்டதிட்ட திருத்தக் குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி. கலந்து கொண்டு புதிய வழக்கறிஞர்களை வாழ்த்தியும் வழக்கறிஞர்கள் தொழிலில் ஏற்றம் பெற பின்பற்றவேண்டிய செயல்பாடுகள் குறித்தும் உரையாற்றினார். இந்நிகழ்வில் அகில இந்திய பார் கவுன்சில் தலைவர் மனன் குமார், மிஸ்ரா, அகில இந்திய பார் கவுன்சில் துணைத் தலைவர் எஸ்.பிரபாகரன், நாடாளுமன்ற உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், MHAA தலைவர் ஜி.மோகனகிருஷ்ணன் மற்றும் பார் கவுன்சில் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

வட கிழக்குப் பருவமழையினை முன்னிட்டு

# சென்னை மாநகராட்சி சார்பில் பல்வேறு பணிகள் ஆய்வு!

## தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா நேரில் மேற்கொண்டார்!

சென்னை, ஜூலை 14-

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், நீர்நிலைகளில் தூர்வாரும் பணிகள் உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு நேற்று (13.07.2024), பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், நீர்நிலைகளில் தூர்வாரும் பணிகள் உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**நீர்வளத்துறை**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போரூர் ஏரியின் வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட்டு, வெள்ளப் பாதிப்புகளை தவிர்க்க தகுந்த நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அதனடிப்படையில் நீர்வளத்துறையின் சார்பில் முதற்கட்டமாக ரூ.100 கோடி மதிப்பில் போரூர் ஏரியில் வெள்ளப்பாதிப்பு ஏற்படாமல் தடுக்க 2022-23-ஆம் ஆண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது இரண்டாம் கட்டமாக, ரூ.84.93 கோடி மதிப்பில் மணப்பாக்கம் கால்வாய், கொளப்பாக்கம் கால்வாய் மற்றும் கெருகம்பாக்கம் கால்வாயில் வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள், நீர்வளத்துறையின் சார்பில் ஆலந்தூர் மண்டலம், மணப்பாக்கம் அருகில் உள்ள அடையாறு ஆற்றில் ரூ.24.80 கோடி மதிப்பில் மியாட் பாலம் முதல் விமான நிலையம் வரை மேற்கொள்ளப்பட்டு வரும் கரையைப் பலப்படுத்துதல், வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணி, மழைநீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இப்பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கொளப்பாக்கம் கிராமம், கொளப்பாக்கம் கால்வாயில் ரூ.23.28 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்புச் சுவர் அமைத்தல், அகலப்படுத்துதல் மற்றும் தூர்வாரும் பணியினையும், கெருகம்பாக்கம் கிராமம், கெருகம்பாக்கம் கால்வாயில் ரூ.34.45 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்படுத்தும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பருவமழைக்கு முன்பாக பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட செம்மொழி சாலை, மேற்குப் பகுதியில் உள்ள சதுப்புநில கால்வாயில் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், சோழிங்கநல்லூர் மண்டலம், செம்மஞ்சேரி, நூக்கம்பாளையம் பாலம் அருகில் உள்ள கால்வாயில் 3,750 மீ. நீளத்திற்கு ரூ.65 இலட்சம் மதிப்பிலும், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட வேளச்சேரி ஏரியில் ரூ.30 இலட்சம் மதிப்பிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆகாயத்தாமரைகள் மற்றும் கழிவுகள் அகற்றும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அகற்றப்படும் கழிவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்திடவும், இப்பணிகளை பருவமழைக்கு முன்னதாக விரைந்து முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**நெடுஞ்சாலைத்துறை**

விரிவான சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ், பெருங்குடி மண்டலம், பல்லாவரம் துரைப்பாக்கம் சாலையில் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் வரை 2,427 மீ. நீளத்தில் ரூ.70 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெரிய மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியினையும், தேனாம்பேட்டை மண்டலம், அண்ணாசாலை, அண்ணா மேம்பால அணுகு சாலையில் ரூ.8.45 கோடி மதிப்பில் ஜி.என்.செட்டி ஏ.ஆர்.எம். முதல் உத்தமர் காந்தி சாலை வரை மேற்கொள்ளப்பட்டு வரும் விடுபட்ட மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடித்திட அலுவ லர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், விரிவான சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ், சோழிங்கநல்லூர் மண்டலம், செம்மொழி சாலை, எல்காட் பகுதியில் ரூ.14 கோடி மதிப்பில் மேடவாக்கம்-சோழிங்கநல்லூர் - குடுமியாண்டித் தோப்பு சாலையில் கட்டப்பட்டு வரும் உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு, தொழில் நுட்ப வழிகாட்டுதலின்படி தரமாகவும், குறித்த காலத்திற்குள்ளும் பணியினை முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி**

தேனாம்பேட்டை மண்டலம், அடையாறில் உள்ள தொல்காப்பியப் பூங்காவில் ரூ.42.45 கோடி மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் தொல்காப்பியப் பூங்காவின் பகுதி 1 மற்றும் 2ஐ இணைத்து சாந்தோம் சாலையில் ரூ.13 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள ஆகாயநடைபாதைப் பணிக்கான வரைபடத்தினைப் பார்வையிட்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி இப்பணியை விரைவில் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்**

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் வடக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் ரூ.8.16 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் 3.40 கி.மீ. நீளத்திற்கு 400 மி.மீ. விட்டமுள்ள பிரத்யேக நெகிழிரும்பு குடிநீர் குழாய் அமைக்கும் பணியினைக் கேட்டறிந்து பணியினை இம்மாத இறுதிக்குள் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**நியாயவிலைக்கடை**

முன்னதாக, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், கெருகம்பாக்கம், திரு.வி.க.தெருவில் உள்ள கூட்டுறவுத்துறையின் நியாய விலைக் கடையினைப் பார்வையிட்டும், மக்களிடம் கலந்துரையாடியும், பொருட்களின் இருப்பு மற்றும் விநியோகம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், கூடுதல் தலைமைச் செயலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் தலைமைச் செயலாளர்/சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை உறுப்பினர் செயலர் டாக்டர் எஸ். விஜயகுமார், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர் ஆர். செல்வராஜ்,

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். அருண்ராஜ், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன்குமார், மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சென்னை தெற்கில் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் சைதாப்பேட்டை, வேளச்சேரி, சோழிங்கநல்லூர் பகுதிகளில் பொதுமக்களை சந்தித்து நன்றி தெரிவிக்கிறார்!



## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை தெற்கில் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் சைதாப்பேட்டை, வேளச்சேரி, சோழிங்கநல்லூர் பகுதிகளில் 16-7-2024 முதல் 19-7-2024 ஆகிய நாட்களில் பொதுமக்களை சந்தித்து நன்றி தெரிவிக்கிறார்.

அதன் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 16-7-2024 - | காலை 7 மணி - | சைதை கிழக்குபகுதி |
| | மாலை 4 மணி - | சைதை மேற்கு பகுதி |
| 17-7-2024 - | காலை 7 மணி - | சோழிங்கநல்லூர் மத்திய பகுதி |
| | மாலை 4 மணி - | சோழிங்கநல்லூர் மேற்குபகுதி |
| 18-7-2024 - | காலை 7 மணி - | புனித தோமையர்மலை தெற்கு ஒன்றியம் |
| | மாலை 4 மணி - | சோழிங்கநல்லூர் கிழக்குபகுதி |
| 19-7-2024 - | காலை 7 மணி - | வேளச்சேரி மேற்கு பகுதி |
| | மாலை 4 மணி - | வேளச்சேரி கிழக்கு பகுதி. |

மேற்கண்ட நன்றி அறிவிப்பு நிகழ்ச்சிகள் அந்தந்த பகுதி கழகங்களின் செயலாளர்கள் தலைமையில் நடைபெறுவதால் பகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, ஒன்றிய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் .சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறையின் சார்பில் ஆலந்தூர் மண்டலம், மணப்பாக்கம் அருகில் உள்ள அடையாற்றில் ரூ.24.80 கோடி மதிப்பில் மியாட் பாலம் முதல் விமான நிலையம் வரை மேற்கொள்ளப்பட்டு வரும் கரையைப் பலப்படுத்துதல், வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, கூடுதல் தலைமைச் செயலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

சமூக அநீதிகளை அழித்தொழித்த

# கலைஞர் ஒரு யுக புருஷர்!

## பீட்டர் அல்போன்ஸ் புகழாரம்!

**சென்னை, ஜூலை 14-**

**“தலைவர் கலைஞர் தான் வாழ்ந்த காலத்துச் சீர்கேடுகளையும் மூடப்பழக்கங்களையும், சமூக அநீதிகளையும் அழித்தொழித்த ஒரு யுக புருஷர்” என்று தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத் தலைவர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ் கூறியுள்ளார்.**



இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

தலைவர் கலைஞர் தான் வாழ்ந்த காலத்துச்சீர்கேடுகளையும், மூடப்பழக்கங்களையும், சமூக அநீதிகளையும் அழித்தொழித்த ஒரு யுக புருஷர்.

அவரை வாழ்த்தியவர்களும் உண்டு! தூற்றியவர்களும் உண்டு! ஆனால் யாராலும், எக்காலத்திலும் தவிர்க்கப்பட முடியாதவர்.

இந்திய நாட்டின், தமிழகத்தின் இரண்டு நூற்றாண்டு வரலாற்றின் ஒவ்வொரு பெரும் திருப்பத்திலும் அவர் தன் கால் தடம் பதித்தவர். அவரது வார்த்தைகளில் சொன்னால் “தன் மீது எறியப்பட்ட மலத்தையும், சாணத்தையும், காரி உமிழப்பட்ட எச்சிலையும், இழிந்ததுகள் தன்மேல் கழித்த சிறு நீரையும் தன் காலால் உண்டு, உடலால் செரித்து, உள்ளத்தில் வாங்கி, உணர்வால் ஓங்கி வளர்ந்தவர்.

உயரப்பறக்கும் கழுகின் கழுத்தில் அமரும் கரிச்சான் குஞ்சை, கழுகு என்றுமே காயப்படுத்தியதில்லை. கழுகு பறக்கும் காற்றின் வேகமே அதன் உயிர் குடிக்கும்..

மனநிலை திரிந்த ஞான சூனியங்கள் கலைஞரை இகழ்ந்து இனப்பகைவர்கள் தரும் ஈனப்பிச்சைக்காக விழுந்து கிடக்கின்றன!

கடல் உள்ள வரை, தமிழ் மண் உள்ளவரை கலைஞரின் புகழ் வாழும்!

இவ்வாறு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



**பீட்டர் அல்போன்ஸ்**
தமிழ்நாடு
சிறுபான்மையினர் நல
ஆணையத் தலைவர்

பெருந்தலைவர் காமராசர் 121வது பிறந்தநாள்: திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# காமராசர் திருவுருவச் சிலைக்கு - அமைச்சர் கே.என்.நேரு மாலை அணிவிக்கிறார்!

## மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி - ந. தியாகராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருச்சி, ஜூலை 14-

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 121வது பிறந்தநாளை முன்னிட்டு திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் அவரது பிறந்தநாளான நாளை 15.07.2024ம் திங்கட்கிழமை காலை: 8.00 மணியளவில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்களின் தலைமையிலும், எங்கள் (க.வைரமணி, காடுவெட்டி ந.தியாகராஜன், மு.அன்பழகன்) முன்னிலையிலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி கள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு கர்ம வீரர் காம ராசர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியின் பிரம்மாண்டமான வெற்றி!

# தமிழ்நாடு முதலமைச்சருக்கு பாராட்டுகள்!

## கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஈ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கை!

சென்னை, ஜூலை 14-

இதுகுறித்து கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-



விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் பெற்றிருக்கின்ற பிரம்மாண்டமான வெற்றி தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் மக்களை சென்றடைந்திருப்பதை நிருபிக்கின்றது. இன்னும் நிறைய திட்டங்களை அடித்தட்டு மக்களுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் செய்வார் என்று மக்கள் நம்புவதை இந்த இடைத்தேர்தல் முடிவுகள் காட்டியிருக்கின்றது.

தமிழ்நாடு அரசு இன்னும் அதிக பாய்ச்சலோடு செயல்படுகின்ற ஊக்கத்தை, பொறுப்பை கொடுத்திருக்கிறது. எதிர்பார்த்த வித்தியாசத்தோடு அன்னியூர் சிவா அவர்கள் வெற்றி பெற வைத்திருக்கின்ற விக்கிரவாண்டி வாக்காள பெருமக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் கூட்டணி கட்சிகளுடைய தேர்தல் பிரச்சா ரங்கள் எடுபடவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் காட்டியிருக்கின்றது.

ஏன் பா.ம.க. வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தெளிவாக பேசுகின்ற நிலையில் பி.ஜே.பி. தலைமையிலான கூட்டணி இல்லை என்பதை காட்டுகிறது. இவ்வளவு பெரிய வெற்றிக்கு காரணமாக இருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முடிச்சூர் ஊராட்சியில் உள்ள ரங்கா நகர் குளத்தை ரூ.4.25 கோடி மதிப்பீட்டில் தூர்வாருதல் மற்றும் பூங்கா நடைபாதை அமைக்கும் பணியினை தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ் ஆர் ராஜா எம்.எல்.ஏ. நேரில் சென்று ஆய்வு செய்தார். உடன் அரசு அதிகாரிகள், முடிச்சூர் ஊராட்சி மன்ற துணை தலைவர் தி.அ.விநாயகமூர்த்தி, கிளை கழக செயலாளர்கள் பி.எஸ்.ரமேஷ், சுனில் மேத்யூ உள்ளிட்ட கழக தோழர்களும் பொது நலசங்கத்தினரும் உள்ளனர்.